மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, உசிலம்பட்டி
முன்னிலை : திரு.G. சத்திய நாராயணன் பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண்.1(முகூபொ)
2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 08ம் நாள் திங்கட்கிழமை
**DVOP.No.06/2024**

காயத்ரி ... மனுதாரர்

// எதிரிடை //

1. மணிகண்டன்
2. பரமன்
3. அழகரக்காள் ... எதிரிகள்

இவ்வழக்கு 30.04.2024ம் தேதி தனிநபர் வழக்காக இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.O.P. செல்வம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் S. தங்கத்துரை அவர்கள் ஆஜராகி மனுதாரர் தரப்பு சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்ய அழைத்தும் ஆஜராகாததால் இவ்வழக்கின் ஆவணங்களை முறையாக பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரரால் 1ம் எதிர்மனுதாரரிடருந்து மாதாந்திர வாழ்க்கை பொருளுதவி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் வருமாறு :**

1ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் கணவர் என்றும், 2, 3 எதிர்மனுதாரர்கள் மனுதாரரின் மாமனார், மாமியார் என்றும், 1ம் மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் கடந்த 26.10.2020ம் தேதி வீரபாண்டி ஸ்ரீ கணபதி மஹாலில் வைத்து திருமணம் நடைபெற்றது என்றும், திருமணத்தின்போது மனுதாரருக்கு அவரது பெற்றோர்களால் சுமார் 3 பவுன் தங்க நகையும், சுமார் ரூ.1,75,000 பெறுமானமுள்ள சீர்வரிசை பண்ட, பாத்திரங்கள் கொடுக்கப்பட்டது என்றும், 1ம் எதிர்மனுதாரருக்கு மனுதாரரின் பெற்றோர்களால் சுமார் 2 பவுன் தங்க செயினும், 1 பவுன் மோதிரமும் போடப்பட்டது என்றும், மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரரும் திருமணத்திற்கு பின்னர் எதிர்மனுதாரரின் சொந்த வீட்டில் வாழ்ந்து வந்தார் என்றும்,

மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரரும் கூட்டுக்குடும்பமாக 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்களுடன் சேர்ந்து குடும்பம் நடத்தி வாழ்ந்து வந்தார்கள் என்றும், 1ம் எதிர்மனுதாரர் தேனியில் உள்ள LS மில்லில் ITI முடித்துவிட்டு பிட்டராக பணியாற்றி ரூ.20,000 சம்பளம் பெற்று வருகிறார் என்றும், திருமணம் முடிந்த 30 நாட்களுக்குள்ளேயே மனுதாரரின் 3 பவுன் நகையை வாங்கி அடகுவைத்து செலவு செய்துவிட்டார் என்றும், மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் குழந்தை இல்லை என்பதால் 2, 3 எதிர்மனுதாரர்கள் மனுதாரரை குழந்தை பாக்கியம் இல்லை என்று ஏளனமாக கூறி அடிக்கடி சண்டை போட்டு வந்தார்கள் என்றும்,

2, 3 எதிர்மனுதாரர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டி குழந்தை பேருக்காக சுமார் ரூ.1,00,000 வரதட்சணையாக கேட்டு அடிக்கடி துன்புறுத்தி தகாத வார்த்தைகளால் பேசி அடித்து விரட்டிவிட்டனர் என்றும், அதனால் வீரபாண்டி காவல் நிலையத்தில் கடந்த 06.07.2023ம் தேதி புகார் மனு கொடுத்தார் என்றும், புகார் மனுவைப் பெற்று கொண்ட காவல் துறை சார்பு ஆய்வாளர் எதிர்மனுதாரர்களை அழைத்து விசாரித்து எச்சரித்து அனுப்பினார் என்றும், 1ம் எதிர்மனுதாரர் வேறொரு பெண்ணுடன் கள்ளத்தொடர்பு வைத்து கொண்டு மனுதாரரை அடித்து சித்ரவதை செய்து கடந்த 26.09.2023ம் தேதி மனுதாரரின் சான்றிதழ்கள் மற்றும் துணிமணிகளைத் தராமல் வீட்டை விட்டு விரட்டிவிட்டார் என்றும்,

மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரின் மீதான அன்பினால் 1ம் எதிர்மனுதாரர் எவ்வளவு கொடுமைப்படுத்தியும் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழவே விருப்பம் தெரிவித்து ஊரிலுள்ள பெரியோர்கள் முன்னிலையில் சமரசம் பேசியதில் 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ மறுத்துவிட்டார் என்றும், அதற்கு 2, 3 எதிர்மனுதாரர்கள் உறுதுணையாக இருந்து வருகிறார்கள் என்றும், மனுதாரர் எந்தவொரு வருமானமும் இல்லாமல் அவரது பெற்றோர் வீட்டில் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார் என்றும், மனுதாரரின் தந்தை இறந்துவிட்டார் என்றும், மனுதாரரின் தாயார் மட்டுமே உள்ளார் என்றும்,

1ம் எதிர்மனுதாரருக்கு வீரபாண்டியில் சுமார் ரூ.10 இலட்சம் மதிப்பில் சொந்தமாக 2 வீடுகள் உள்ளது என்றும், மேலும் சுமார் ரூ.5 இலட்சம் மதிப்புள்ள காலிமனை உள்ளது என்றும், 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரைக் கணவர் என்ற முறையில் பராமரிக்க

சட்டப்படி கடமைப்பட்டவர் என்றும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் கடந்த 26.09.2023ம் தேதியிலிருந்து பிரிந்து தனித்தனியே வாழ்ந்து வருகிறார் என்றும், கடந்த 7 மாதங்களாக மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் எந்தவித பொருளுதவியோ, பணஉதவியோ ஏதும் செய்யவில்லை என்றும், எனவே மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட வீட்டில் தொடர்ந்து குடியிருக்கும் உரிமையை வழங்கிடவும், மனுதாரருக்கு சொந்தமான 3 பவுன் தங்க நகையும், சீர்வரிசை பண்ட பாத்திரங்களையும் திரும்ப ஒப்படைக்கவும், மனுதாரரின் அத்தியாவசிய செலவினங்களுக்கு ரூ.20,000 வழங்கிடவும், மனுதாரருக்கு ஏற்படுத்திய காயத்திற்கும், வன்கொடுமைக்கும் மனஉளைச்சலுக்கும் ரூ.1 இலட்சம் இழப்பீடு வழங்கிடவும் எதிர்மனுதாரர்களுக்கு குற்றவியல் நடைமுறைச் சட்டப்படி தண்டனை வழங்கி உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை சுருக்கம்**

எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்ட சங்கதிகள் தவிர மற்றவை 1ம் மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்றது என்பதைத் தவிர மற்றவைகள் உண்மைக்கு புறம்பானவை என்றும், மனுதாரர் போட்டு வந்ததாக சொல்லப்படும் 3 பவுன் நகை தங்கமா, பித்தளையா என்பது கூட எதிர்மனுதாரர்களுக்கு தெரியாது என்றும், மனுதாரர் தாலியில் போட்டிருந்த காசே பித்தளை என்பது தெரிந்தவுடன் மற்ற நகைகளை எடுத்துகொண்டு தாயார் வீட்டிற்கு எடுத்து சென்றுவிட்டதாகவும், மனுதாரர் கொண்டு வந்த சீர்வரிசை பொருட்கள் ரூ.50,000 கூட இருக்காது என்றும், 1ம் எதிர்மனுதாரருக்கு ஒரே ஒரு மோதிரம் மட்டும் தான் போட்டார்கள் என்றும், திருமணம் முடிந்த கொஞ்ச நாட்களிலேயே தனிக்குடித்தனம் சென்றுவிட்டதாகவும், அதனால் 2, 3 எதிர்மனுதாரர்களுக்கும், மனுதாரருக்கும் எந்த தொடர்பும் இல்லாமல் போய்விட்டது என்பதால் குடும்ப வன்முறை என்ற எந்த செயலும் எதிர்மனுதாரர்கள் செய்யவில்லை என்றும்,

1ம் எதிர்மனுதாரர் மில்லில் வேலை பார்ப்பதால் ESI, EPF பிடித்தம் போக ரூ.8,309/- மட்டுமே ஊதியமாக பெற்று வருவதால் திருமணத்திற்கு வாங்கிய கடனை அடைக்க முடியாமல் கஷ்டப்படுகிறார் என்றும், மனுதாரரின் 3 பவுன் நகையை

அடமானம் வைத்துவிட்டதாக கூறுவது தவறானது என்றும், ஏனென்றால் மனுதாரர் அணிந்து வந்த நகை கவரிங் என்றும், மனுதாரரிடம் ரூ.1இலட்சம் வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும், மனுதாரர் 1ம் எதிர்மனுதாரர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றும், 1ம் எதிர்மனுதாரர் தான் மனுதாரரைத் தன்னோடு சேர்ந்து வாழ கேட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும்,

1ம் எதிர்மனுதாரர் வேறொரு பெண்ணுடன் கள்ளத்தொடர்பு வைத்துள்ளதாக சொல்வது கற்பனையானது என்றும், அவ்வாறு வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்தால் அவரைப் பற்றிய விபரத்தினையும் மனுவில் குறிப்பிட்டிருப்பார் என்றும், எனவே அவர் கூறியது தவறானது என்றும், மனுதாரரின் கல்வி சான்றிதழ்களை நீதிமன்றத்தில் வைத்து பெற்றுகொண்டார் என்றும், மனுதாரரின் துணிமணிகளை எப்போது வேண்டுமானாலும் மனுதாரர் வசம் ஒப்படைக்க 1ம் எதிர்மனுதாரர் தயாராக உள்ளார் என்றும், மனுதாரரின் தாயார் உசிலம்பட்டி துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வருவதாலும், மனுதாரரும் திருமணத்திற்கு முன்பு தனியார் நிறுவனத்தில் பார்த்து வந்த வேலையைத் தற்போதும் செய்து வருவதாலும் அவரால் அவரைப் பராமரித்து கொள்ள முடியும் என்றும்,

மனுதாரர் எந்தவித காரணமுமின்றி தன் விருப்பத்திற்கேற்றார் போல் 1ம் எதிர்மனுதாரரை பிரிந்து சென்றுவிட்டதால் மனுதாரரைப் பராமரிக்க வேண்டிய அவசியம் எதிர்மனுதாரருக்கு இல்லை என்றும், மேலும் திருமணத்திற்கு பின்னர் மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரிடம் 3 ஆண்டுகளாக பிரவீன் என்பவரை காதலித்து வந்ததாகவும், அது மனுதாரரின் தாயாருக்கு தெரியவந்ததால் தான் உங்களுக்கு திருமணம் செய்து வைத்துவிட்டதாக கூறினார் என்றும், திருமணத்திற்கு பின் 1–1/2 மாதங்கள் கழித்து அவரது உறவினர் வீட்டு கல்யாணத்திற்கு சென்றிருந்த போது 1ம் எதிர்மனுதாரருக்கு போன் போட்டு ஒருநபர் எதுக்குடா உன் பொண்டாட்டி என்னை தொந்தரவு செய்ய வேண்டும், அவளுக்கு கல்யாணமாகிவிட்டது எனக்கு கல்யாணம் ஆகப்போகிறது, இந்த நம்பரில் இருந்து தினமும் உன் மனைவி போன் பேசுகிறாள், அவளைக் கண்டித்து வைத்துகொள் என்று திட்டினார் என்றும்,

இதுகுறித்த மனுதாரரின் தாயாரிடம் கேட்டதற்கு சின்னபெண் ஏதோ தெரியாமல்

செய்துவிட்டாள், கண்டிப்பதாக கூறினார் என்றும், அன்று இரவே 1ம் எதிர்மனுதாரரிடம் மனுதாரரின் தாயார் ஊரான உசிலம்பட்டிக்கு போய்விடலாம், அவரது அக்காவும் அவரது கணவருடன் உசிலம்பட்டிக்கு வந்து விட்டதால் நாமும் போகலாம் என்று பேசி சண்டை போட்டதால் வீரபாண்டியிலேயே தனிக்குடித்தனம் சென்றதாகவும், ஆனால் மனுதாரர் உசிலம்பட்டி தான் போக வேண்டும் எனக்கூறி சண்டைபோட்டு 1ம் எதிர்மனுதாரருக்கு சரியாக சமைப்பதில்லை, பெரும்பாலான நாட்கள் 1ம் எதிர்மனுதாரர் பட்டினியாகத்தான் இருப்பார் என்றும்,

மேலும், மனுதாரர் சண்டை போட்டு பேசும் போது எதிர்மனுதாரர் பேசவில்லை என்றால் தற்கொலை செய்து கொள்வேன் என்று மிரட்டுவது, எலி மருந்து, கரப்பான்பூச்சி மருந்து தின்றுவிடுவேன் என்றும், தூக்கில் தொங்கிவிடுவேன் என்றும், எலட்ரிக் வயரினை கடித்துவிடுவேன் என்றும் கையை அறுத்துகொள்வேன் என்றும் மிரட்டி வந்தார் என்றும், 1ம் எதிர்மனுதாரருக்கு மனுதாரர் எந்த வகையில் எல்லாம் இடைஞ்சல் ஏற்படுத்த முடியுதோ அத்தனை முயற்சிகளையும் மேற்கொண்டு வந்தார் என்றும், 1ம் எதிர்மனுதாரர் அவரது பெற்றோர்களிடமோ, அண்ணன் தம்பியிடமோ பேசி சண்டை போடுவார் என்றும், தாயாருக்கு உடல்நிலை சரியில்லை என்று மருத்துவமனைக்கு அழைத்து சென்றால் தாயாருடன் சேர்ந்து தவறாக பேசினார் என்றும்,

மனுதாரருக்கு குழந்தை இல்லை என்பதால் அதற்கு சிகிச்சைக்கான செலவுகள் அனைத்தும் 1ம் எதிர்மனுதாரர் தான் செய்து வந்தார் என்றும், ஆனால் அதை எதுவும் மனுதாரர் பொருட்படுத்தாமல் 1ம் எதிர்மனுதாரரை ஆண்மை இல்லாதவன் என்று இழிவாகவும், கீழ்த்தரமாகவும் பேசினார் என்றும், இதுவரை 15 முறைக்குமேல் பெரியோர்களை வைத்து பேச அழைத்தும் வரமறுத்துவிட்டு எதிர்மனுதாரர்களைப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் இம்மனுவினைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் கோரியுள்ளபடி மாதாந்திர வாழ்க்கைப் பொருளுதவி கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவானது நிலைநிற்கத்தக்கத்தல்ல என்றும், மனுதாரர் மனுவினை எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது.

4. மனுதாரரின் மனுவிலிருந்தும், 1ம் எதிர்மனுதாரரின் எதிருரையிலிருந்தும் மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் இடையே உள்ள கணவன், மனைவி உறவு

முறை உள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும், 1ம் எதிர்மனுதாரர் தான் மனுதாரரைப் பராமரிக்க வேண்டிய கடமைப்பட்டவர் என்பது தெளிவாக தெரியவருகிறது.

5. இந்நிலையில் 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் கணவர் என்ற முறையிலும், மனுதாரரைப் பராமரிக்க வேண்டிய கடமை எதிர்மனுதாரருக்கு உள்ளது. இருப்பினும், எதிர்மனுதாரரின் நிலையான மாதாந்திர வருமானம் குறித்து எந்தவிதமான ஆவணமும் தாக்கல் செய்யாத நிலையில் மனுதாரர் வாழ்க்கைப் பொருளுதவியாக இம்மனுவில் கோரியுள்ள தொகை முழுவதையும் 1ம் எதிர்மனுதாரர் வழங்க வேண்டும் என உத்தரவிடுவது நீதிக்குகந்தல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. மேலும், மனுதாரரின் 3 பவுன் தங்க நகை மற்றும் சீர்வரிசை பண்ட பாத்திரங்களை 1ம் எதிர்மனுதாரர் திரும்பக் கொடுத்துவிட்டதாக அவர் தரப்பு எதிருரையில் கூறியுள்ளார். அதனை மறுக்கும் விதமாக மனுதாரர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், மனுதாரருக்கு ஏற்படுத்திய காயத்திற்கும், வன்கொடுமைக்கும், மனஉளைச்சலுக்கும் இழப்பீடாக ரூ.1,00,000 மனுவில் கோரியுள்ள நிலையில், மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தினையோ, வன்கொடுமையினையோ நிரூபிக்கும் விதத்தில் ஆவணங்களோ, சாட்சியங்கள் மூலமாகவோ நிரூபிக்கவில்லை என்பதால் மனுதாரர் கோரிய இதர பரிகாரங்கள் வழங்குவது நீதிக்குகந்தல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

7. இருப்பினும், 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் கணவர் என்ற முறையில் மனுதாரருக்கு வாழ்க்கைப் பொருளுதவி வழங்க கடமைப்பட்டவர் ஆவார் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

முடிவாக, இந்த மனுதாரர்களின் மனுவினை பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் வாழ்க்கைப் பொருளுதவியாக ரூ.5,000த்தினை மனுத்தாக்கல் செய்த நாள்முதல் உத்தரவு நாள் வரையிலான பாக்கித் தொகையை 3 மாத காலத்திற்குள் மனுதாரரிடம் வழங்க வேண்டும் என்றும், மாதாந்திர வாழ்க்கைப் பொருளுதவி தொகையான ரூ.5,000த்தினை மனுதாரருக்கு 1ம் எதிர்மனுதாரர் ஒவ்வொரு ஆங்கில மாதமும் 5ம் தேதிக்குள் மனுதாரரிடம் வழங்க வேண்டும் என்று இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 08ம் தேதி அவையறிய பகரப்பட்ட உத்தரவாகும்.

(ஒம்)G. சத்திய நாராயணன்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1,(முகூபொ)
உசிலம்பட்டி.

**அட்டவணை:**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள்:**

ம.சா.1 காயத்ரி

ம.சா.2 பேச்சியம்மாள்

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :**

ம.சா.ஆ.1 26.10.2020ம் தேதியிட்ட திருமண அழைப்பிதழ் அசல்

ம.சா.ஆ.2 26.10.2020ம் தேதியிட்ட திருமண புகைப்படம் அசல்

ம.சா.ஆ.3 மனுதாரர் ஆதாரர் அட்டை நகல்

ம.சா.ஆ.4 20.09.2024ம் தேதியிட்ட எதிர்மனுதாரர் மனுதாரர் மீது HMOP.No.477/2024 மனுவின் அலுவலக நகல்

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :**

இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** :

இல்லை

**புகார்தாரர் தரப்பு சான்று பொருள்** :

இல்லை

(ஒம்)G. சத்திய நாராயணன்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1,(முகூபொ)
உசிலம்பட்டி.

உண்மை நகல்

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1,(முகூபொ)
உசிலம்பட்டி.